# <u>சாதாரணக் கூட்டம்</u>

**அன்புடையீர்**

வணக்கம். பல்லடம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் வருகிற 25.10.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட பொருட்களை பரிசீலித்து நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## <u>பொருள் :01</u>

பல்லடம் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரது செப்டம்பர் 2024 மாதத்தின் நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1065/2020/சி1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் :02</u>

பல்லடம் நகராட்சியின் மறுபொது ஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்:20.09.2024–ன் படி நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 27.09.2024–ஆம் தேதியன்று நடைபெற்ற பொதுஏலத்தில் குத்தகை இனங்களின் வரிசை எண்:2–ல் உள்ள கடைஎண்.2/11க்கு மட்டும் இரண்டு நபர்கள் வைப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர் மற்றும் வரிசை எண் 7–ல் காணும் ஆண்டு குத்தகைஇனத்திற்கு வைப்புத்தொகையை செலுத்தி பொதுஏலத்தில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர். மற்ற இனத்திற்கு வைப்புத்தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடைகள் மற்றும் குத்தகை இனங்கள்விவரம் | ஏலதாரர் / ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | ஏலத்தொகை/ ஒப்பந்த புள்ளி தொகைவிவரம் |
|---|---|---|---|
| 1) | பேருந்து நிலைய தெற்கு பார்த்த கடை எண் :2/11 | I.தாஜீதீன்,<br>கே.என்.பி காலன் ரோடு,<br>காங்கேயம் கிராஸ் ரோடு,<br>9043485680. | ரூ. 11100/–<br>(அரசு மதிப்பை விட ரூ.600/– அதிகம்) |
| | | T.ஜியாவுதின்,<br>கே.என்.பி காலன் மெயின் ரோடு<br>காங்கேயம் குறுக்கு தெரு<br>திருப்பூர் | ரூ. 10600/–<br>(அரசு மதிப்பை விட ரூ.100/– அதிகம்) |
| 2) | பேருந்து நிலையம் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள இருசக்கரவாகனம் நிருத்தும் இடத்தில் கட்டணம் வசூலித்தல் உரிமம் | கே.நடராஜன்,<br>254/2, சி.ஆர்.பிள்ளை லே அவுட்<br>மங்கலம்ரோடு,<br>பல்லடம்.<br>94433 77471 | ரூ. 11,63,000/–<br>(அரசு மதிப்பை விட ரூ.11,12,000/ – குறைவு) |
| | | வே.மலைச்சாமி,<br>74, பாரதிபுரம்,<br>பல்லடம்.<br>94433 57069 | ரூ. 11,62,000/–<br>(அரசு மதிப்பை விட ரூ.11,13,000/– குறைவு) |

மேற்படி வரிசைஎண்:1–ல் காணும் குத்தகை இனம், **பேருந்து நிலைய தெற்கு பார்த்த கடைஎண்.2–க்கு** விடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் திரு.தாஜீதீன் என்பவர் ரூ.11,100/–யை குறிப்பிட்டு உள்ளார் எனவே, அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.I.தாஜீதீன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடையை ஒப்படைப்பு செய்ய மற்றும் அனுமதிக்கலாம். மேலும் ஏலம் போகாத கடைகளுக்கு மீண்டும் மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி வரிசை எண்:2–ல் காணும் குத்தகை இனம் **பேருந்துநிலையம் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரு சக்கர வாகனம் நிருத்தும் இடத்தில் கட்டணம் வசூலித்தல்**

**உரிமத்திற்கு** ஏலத்தில் கலந்து கொண்ட இருவரில் திரு.கே.நடராஜன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை அரசு மதிப்பீட்டு தொகையை விட மிகவும் குறைவாக ஏலம் கோரப்பட்டுள்ளதை ஏலபதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பதிவிற்கும் மீண்டும் மறு முன்ஏலம் / மறுஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.கஎண்: 1422/2014/அ2)

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :03

நகராட்சி பகுதியில் உள்ள தெருநாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு கருத்தடை அறுவை சிகிச்சைக்கூடம் ஒன்றை நகராட்சியின் பொறுப்பில் கட்டமைத்து பராமரிக்க திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி, தாராபுரம் சாலையில் மாதப்பூரில் உள்ள பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிர் மையத்தில் மேற்காணும் கருத்தடை அறுவை சிகிச்சை மையம் மற்றும் மருத்துவர் அறை அமைக்கும் பணிகளை ரூ.9.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்காணும் பணியானது பொது சுகாதார பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2300/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :04

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35) 14.03.2023 ஆம் தேதி முதல் அமல் படுத்தப்பட்டுள்ளதன் பேரில் பல்லடம் நகராட்சியில் உள்ள வார்டுகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமக்கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொழில் உரிமக் கட்டண விகிதங்களின் அடிப்படையில் தொழில் உரிமம் வழங்க ஏதுவாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று திருப்பூர் மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டியுள்ளது.

எனவே கீழ்கண்டவாறான பல்லடம் நகராட்சி உள்ளாட்சி துறை அறிவிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற்று திருப்பூர் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

### உள்ளாட்சித் துறை அறிவிக்கை

### (ந.க.எண். 1548/2024/எச்1 நாள்: 15.07.2024)

### பல்லடம் நகராட்சி

(1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் ( 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35ன் படி திருத்தப்பட்டது) பிரிவு 102, 102(அ), 103, 104,114, 114A, , 199 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 மற்றும் 290 ஆகிய உட்பிரிவுகளின்கீழ் வெளியிடப்படும் அறிவிப்புகள்)

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் ( 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35 ) பிரிவு 102, 102(அ), 103, 104,114, 114A, மற்றும் 199– இன் படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 மற்றும் 290ன் படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 394ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், பல்லடம் நகராட்சி பகுதியில் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான உப விதிகள் ஏற்படுத்தப்பட்டு இதன் மூலம் மக்களின் கவனத்திற்கு அறிவிக்கை செய்யப்படுகிறது.

1) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் 9 விதி 289 ன் படி வர்த்தக உரிமத்திற்கான அட்டவணைகள் I, II, III –ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும்,

ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது.

2) இந்த விதியின் கீழ் உரிமம் வழங்குவதற்கான கட்டணம், அட்டவணைகள் I, II அல்லது III – ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டண விகிதத்திற்குள், மன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

3) அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன், படிவம் 1 – ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

(a) தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரம சான்றிதழ் போன்ற அடையாள சான்று

(b) உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமான ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை :

வரம்புரையாக: செல்லுபடியாகக்கூடிய, வரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர், படிவம் 17– ல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமரப்பிக்க வேண்டும்;

(c) அட்டவணை I– ன் கீழான விண்ணப்பங்களுக்கு நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு, உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை அல்லது வருமான வரி விவர அறிக்கை :

வரம்புரையாக: உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விவர அறிக்கையும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர், உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18– ல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

4) அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1) –ன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்க வேண்டு .

5) அத்தகைய உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பம் பெறப்பட்டவுடன், வர்த்தகம் அல்லது வியாபாரம் அட்டவணை I மற்றும் II தொடர்பானது எனில், ஆணையாளர், அந்த வர்த்தகம் (அல்லது) வியாபாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய வாளகத்தினை பார்வையிட்ட பிறகு, தேவையென்று கருதினால், அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் , படிவம் 9– ல் உரிமம் வழங்கலாம் அல்லது எழுதி பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக உரிமம் வழங்க மறுக்கலாம்.

வரம்புரையாக: விண்ணப்பதாரரை விசாரிப்பதற்கு ஒரு வாய்ப்பு வழங்காத வரையில் உரிமம் எதுவும் மறுக்கப்படக்கூடாது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 உள் விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

a) உரிமம் பெறுபவர், 2019– ம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்.
b) நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தாலும் தடைசெய்யப்பட்ட நடவடிக்கை எதனையும், உரிமம் வழங்கப்பட்ட வளாகத்தில் மேற்கொள்ளக்கூடாது.
c) உரிமம் பெறுபவர், வளாகத்தின் தரையினை தளவரிசை அமைத்தோ அல்லது பிறவாறாகவோ உட்புக முடியாத வகையிலும், பொருத்தமான வடிகால் அமைப்புடனும் மற்றும் எல்லா நேரங்களிலும் ஒழுங்காகவும், நல்ல முறையிலும் பராமரிக்கச் செய்ய வேண்டும்.
d) அந்த வளாகம் சரியாக இணைக்கப்பட்டு, பொருத்தமான நுழைவாயில்கள் மற்றும் வாயில்களுடன் ஏற்படுத்தப்பட வேண்டும்.

e) உரிமம் பெறுபவர், அந்த வளாகத்தினை சுத்தப்படுத்தச் செய்ய வேண்டும் மற்றும் எந்தவொரு அழுக்கு அல்லது குப்பை சேர்வதையும் தடுக்க வேண்டும்.
f) உரிமம் பெறுபவர், 2016 – ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளின் அனைத்து வகையினங்களுக்கும் இணங்கி நடக்க வேண்டும்.
g) உரிமம் பெறுபவர், மேற்படி வளாகத்தில் உள்ள ஒவ்வொரு கட்டடத்தின் சுவர்கள் மற்றும் கூரையின் உட்புறங்களின் ஒவ்வொரு பாகத்தினையும் வழக்கமான முறையில் வெள்ளையடிக்கவோ அல்லது வண்ணப்பூச்சு பூசவோ செய்ய வேண்டும்.
h) உரிமம் பெறுபவர், சுத்தமான மற்றும் ஆரோக்கியமான குடிநீர் போதுமான அளவில் வழங்க வேண்டும்.
i) உரிமம் பெறுபவர், மேற்படி வளாகத்தில் அல்லது அது தொடர்பாக செய்யப்படுகிற காற்றோட்ட மற்றும் ஒளியமைப்பு வசதிகளை அனைத்து நேரங்களிலும், நல்ல நிலையிலும், சிறந்த முறையில் செயல்படும்படியும் பராமரிக்கச் செய்ய வேண்டும்.
j) அந்த உரிமம் வழுங்கப்பட்ட வளாகத்தில் ஒரு ஆய்வுப் புத்தகம் பராமரிக்கப்பட வேண்டும். அந்த ஆய்வுப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
k) நகராட்சியால் வழங்கப்பட்ட உரிமம் ஒரு முக்கியமான இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
l) உரிமம் பெறுபவர், அந்த பொதுக் கட்டடத்தில் 2019 – ம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகளின்படி மூடியசுற்று தொலைக்காட்சி (CCTV) அலகுகளை நிறுவ வேண்டும்.
m) உரிமம் பெறுபவர், அறிவிப்பு ஏதுமின்றி, அந்த வளாகம் பயன்பாட்டில் இருக்கும் போது, பகல் அல்லது இரவு என, எந்தவொரு நேரமும், ஆணையாளர் அல்லது இது தொடர்பாக அவரால் அதிகாரமளிக்கப்படுகிற எந்தவொரு அலுவலராலும் மேற்கொள்ளப்படுகிற ஆய்வுக்கு, வளாகத்தினை பார்வையிட அனுமதிக்க வேண்டும்.
n) உரிமம் பெறுபவர், அத்தகைய வளாகங்களில், அனைத்து கழிவுப் பொருட்களையும் போடுவதற்கென, பொருத்தமான மூடப்பட்ட கொள்கலங்களை, பொருத்தமான இடங்களில் வைக்க வேண்டும் மற்றும் அத்தகைய கொள்கலங்களை குறைந்தது ஒவ்வொரு இருபத்திநான்கு மணி நேரத்திற்கும் ஒருமுறை சுகாதாரமான முறையில் காலி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்
o) அரசால் தடை செய்யப்பட்ட பொருள் எதுவும், வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்படவோ அல்லது விற்பனை அல்லது பயன்பாட்டுக்கென வெளியிடப்படவோ கூடாது.
p) தீப்பாதுகாப்பு விதிமுறைகள் வரையறுக்கப்பட்டவாறு பின்பற்றப்பட வேண்டும்.
q) உரிமம் பெறுபவர், அத்தகைய வளாகத்தில் உள்ள ஒவ்வொரு கழிவறை மற்றும் நீர்மலக்கூட கட்டமைப்பின் ஒவ்வொரு பாகத்தினையும், அனைத்து நேரங்களிலும், ஒழுங்காகப் பராமரிக்க செய்ய வேண்டும் மற்றும் அத்தகைய கழிவறை அல்லது நீர்மலக்கூட கருவியின் ஒவ்வொரு பாகமும் மற்றும் அதிலிருந்து செல்லும் ஒவ்வொரு வடிகால் அல்லது வடிகால் அமைப்பு முறையும், அனைத்து நேரங்களிலும், நல்ல நிலையிலும் சிறந்த முறையில் செயல்படும்படியும் பராமரிக்கப்பட வேண்டும்.
r) உரிமம் பெறுபவர், அத்தகைய வளாகங்களை, குறைந்தது ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் ஒருமுறை, சுத்தமாக கூட்டி, கழுவி மற்றும் சுத்தப்படுத்தச் செய்ய வேண்டும் மற்றும் மூடப்பட்ட கொள்கலங்கள் தவிர, வேறு எங்கும் எந்வொரு அழுக்கு அல்லது குப்பையும் சேராமல் தடுக்க வேண்டும்.
s) உரிமம் பெறுபவர், அனைத்து நேரங்களிலும், அத்தகைய வளாகங்களில் உள்ள ஒவ்வொரு கட்டடத்தினையும், எலிகள் அல்லது மற்ற கொறிக்கும் விலங்குகள் இல்லாமல் வைத்திருப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
t) தொற்றுநோய் பாதிக்கப்பட்ட எவரும் வியாபாரம் செய்யக்கூடாது மற்றும் உரிமம் பெறுபவர் எவரும், அத்தகைய எந்தவொரு நபரையும் வியாபாரம் செய்வதில் அவருக்கு உதவி செய்ய பணியமர்த்தக்கூடாது.
u) உரிமம் பெறுபவர், அந்த வளாகத்தில் உள்ள எந்தவொரு நபரும் எந்தவொரு தொற்று அல்லது அபாயகரமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிந்தவுடன், உடனடியாக, தொற்று பரவுதை தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மற்றும் நகராட்சியின் பொதுச் சுகாதார அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.

v) உரிமம் பெறுபவர், வர்த்தகத்தின் கைகாட்டிப் பலகையினை தமிழில் காட்சிப்படுத்த வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் I–ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது , உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணை I, II மற்றும் III ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

விதி 289 கீழ் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமம் அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்துக்கு செல்லுபடியாகும் மற்றும் மேற்கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம்.

உரிமம் பெறாமலோ அல்லது புதுப்பிக்காமலோ தொழில் புரிவோரின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு 114, 114 A மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 304 ன் படி நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு:– (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31 ம் தேதி முடிவடையும்.

## அட்டவணை I

## [ See rules 289(1), (2) and (5)]

1. **பொருந்தக்கூடியதன்மை :**

1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் L XIII), 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951–ம் ஆண்டு மத்தியச்சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச்சட்டம் (1959–ம்ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடி பொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. **உரிமக்கட்டணம் :**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக்கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின்படியான (2006–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

வரம்புரையாக: விண்ணப்பதாரர், ஒரு செல்லுபடியாகக் கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்கவில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் (GSTஎண்) அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

மேலும் வரம்புரையாக:. விண்ணப்பதாரர், ஒரு செல்லுபடியாகக் கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லைஎனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து, **படிவம் 17** ல் உள்ள பிரமாணப்பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

**(a) குறுதொழில் நிறுவனங்கள் ( ஒருவருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/– | 3,500/– |

**(b) சிறுதொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5,000/- |

(c) நடுத்தர தொழில்நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10,000/- |

(d) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10,000/- | 35,000/- |

வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| வ. எ | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 15 | செங்கல் சூளைகள் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 21 | அனைத்து வகையான இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 26 | காற்றுப் பதனிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 28 | அனைத்து வகையான எழுதுபொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்தல் | | | | |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 36 | துப்பரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 41 | அனைத்து வகையான மர/பிளைவுட்/சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 42 | அனைத்து வகையான வன்பொருள்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 43 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

**அட்டவணை II**

**[See rules 289 (1),(2) and (5)]**

1. **பொருந்தும் தன்மை:**

(1) இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது

பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டக சாலைக்கும் பொருந்தும்.

2. பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணைபொருந்தாது:–
   1. இந்த விதிகளின் மற்றஅட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.
   2. 2013–ம் ஆண்டு நிறுமச் சட்டத்தின்கீழ் (2013–ம்ஆண்டு மத்தியச்சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள்.
   3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.
   4. 1959–ம்ஆண்டு படைக்கலச்சட்டம் (1959–ம்ஆண்டு மத்தியச்சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடி பொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934 –ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம்ஆண்டு மத்தியச்சட்டம் XXX) மற்றும் 1952–ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின்கீழ் (1957–ம் ஆண்டு மத்தியச்சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்
   5. 2010–ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010 –ம்ஆண்டுமத்தியச்சட்டம் 23).

**1. உரிமக்கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 700/– | 10,000/– |

**2. வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல் :**

| வ. எ ண் | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு சேவை மையங்கள் | 700 |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 8 | கழிவுத்தாள் கடை/பழைய வேண்டாத பொருட்கள் | 700 |
| 9 | நூற்பு வேலைகள் | 1000 |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் (Air conditioner) | 700 |
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 700 |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Machines) | 700 |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 700 |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் – நான்கு சக்கரம் | 2000 |

| | | |
|---|---|---|
| 17 | மோட்டார் வாகன ஷோரூம்கள் – இரண்டு சக்கரம் | 1000 |
| 18 | தலைக்கவச கடைகள் | 700 |
| 19 | இரு சக்கர வாகனகங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 700 |
| 20 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 1000 |
| 21 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 1000 |
| 22 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 23 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 24 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங் களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 25 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 26 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 27 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 28 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 29 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 30 | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardwares) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 31 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1200 |
| 32 | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 33 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 34 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 35 | அனைத்து வகையான வீட்டுஉபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 36 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 37 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 38 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (தளவாட சமான்கள்) | 700 |
| 39 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 40 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 41 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள்/டயர்களையும் சேமித்து வைத்தல், விற்பனை செய்தல் மற்றும் இதர பணிகள் | 1500 |
| 42 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள்/டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 43 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |

| | | |
|---|---|---|
| 44 | அனைத்து வகையான அறைகலன்களையும் (Furnitures) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 45 | அனைத்து வகையான மர / ப்ளைவுட்/ சன்மைகா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 46 | மர வடிவமைப்புகள் விற்பனை | 1000 |
| 47 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் சிறிய கடை | 700 |
| 48 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் பெரிய கடை | 1000 |
| 48 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 49 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 50 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 51 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 52 | அழைப்பிதழ்கள்/வாழ்த்து அட்டை விற்பனை/ அச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 700 |
| 53 | மருந்துக்கடைகள் | 700 |
| 54 | மருத்துவ உபகரணங்கள்/சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 55 | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 56 | எரியக்கூடிய பொருட்கள், ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 57 | புல் மற்றும் வைக்கோலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 58 | முட்டுக்கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 700 |
| 59 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 60 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 61 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 700 |
| 62 | வாகன நிறுத்த நிலையங்கள் | 800 |
| 63 | திரைப்பட ஆய்வகங்கள் | 700 |
| 64 | பார்சல் புக் செய்யுமிடங்கள்/ தூதஞ்சல் (Courier) சேவைகள் | 700 |
| 65 | கேபிள் டி.வி சேவைகள் | 700 |
| 66 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 67 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 700 |
| 68 | பட்டாணி வறுவல் | 700 |
| 69 | ஃபேன்சி ஸ்டோர் | 700 |
| 70 | பஞ்சு மெத்தை/தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 71 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 700 |
| 72 | பல்பொருள் அங்காடி | 1600 |
| 73 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ–சேவை மற்றும் இணைய நிலையம் | 700 |

| | | |
|---|---|---|
| 74 | ஸ்டிக்கர் கடைகள் | 700 |
| 75 | தாவர நாற்றங்கால் கடைகள் | 700 |
| 76 | புகைப்பட சட்டகம் செய்தல்<br>(Photo Framing Works) | 700 |
| 77 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 700 |
| 78 | பொற்கொல்லர்கள் | 700 |
| 79 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 700 |
| 80 | டைல்ஸ் / மார்பிள்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 81 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும்  விற்பனை செய்தல் | 700 |
| 82 | முடி வெட்டும் நிலையங்கள் | 700 |
| 83 | அழகு நிலையங்கள் /தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத /ஸ்பாஸ் (Spa's) | 700 |
| 84 | தையல் கடைகள் | 700 |
| 85 | சலவையகங்கள் | 700 |
| 86 | வினைல் போர்டு கடைகள் | 700 |
| 87 | காலணி  கடைகள் | 700 |
| 88 | கைப்பேசி கடைகள் விற்பனை செய்தல் | 1000 |
| 89 | கைப்பேசி கடைகள் பழுது பார்த்தல் | 700 |
| 90 | மிதி வண்டி மற்றும்   மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 1000 |
| 91 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 700 |
| 92 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 2000 |
| 93 | பதிவு செய்யும் நிலையங்கள்<br>(Recording Theatre) | 700 |
| 94 | அச்சகங்கள் | 700 |
| 95 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 700 |
| 96 | துணிகளை  விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 700 |
| 97 | துணிகளை  விற்பனை செய்தல் (பெரிய கடைகள்) | 1500 |
| 98 | நகைகளை விற்பனை செய்தல் (பெரிய கடைகள்) | 1500 |
| 99 | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 700 |
| 100 | நெல் அவித்தல் | 700 |
| 101 | மரம் அறுக்கும் ஆலைகள் | 1000 |
| 102 | FCS ஆலைகள்(Farm and commercial Storage Manufacturing) | 700 |
| 103 | அரிசி ஆலைகள் | 1200 |
| 104 | அரிசி மண்டி | 1000 |
| 105 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 106 | கோழி இறைச்சியினை  சேமித்து வைத்தல் மற்றும்  விற்பனை செய்தல் | 700 |
| 107 | ஆட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 108 | கோழி  இறைச்சி /ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 109 | மாட்டு இறைச்சியினை  சேமித்து வைத்தல் மற்றும்  விற்பனை செய்தல் | 700 |
| 110 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 111 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 700 |

| | | |
|---|---|---|
| 112 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 113 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 114 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 115 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 116 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 117 | மருத்துவ ஆய்வகங்கள் | 800 |
| 118 | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 700 |
| 119 | அனைத்து வகையான கால்நடைகள்/பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 120 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 700 |
| 121 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 122 | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 123 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700 |
| 124 | பேக்கரிகள் | 800 |
| 125 | பழச்சாறு கடைகள் | 700 |
| 126 | AMF (Assured Minimum Facility) உடன் டீ கடைகள் | 700 |
| 127 | நீர்வாழ்வன காட்சிசாலை(Aquarium) | 700 |
| 128 | ஊறவைத்த தானியங்களை அரைத்தல் | 800 |
| 129 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 700 |
| 130 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 700 |
| 131 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 700 |
| 132 | பீர், பிராந்தி, விற்பனை செய்தல் | 1000 |
| 133 | பொழுது போக்கு கிளப்/பார் | 2000 |
| 134 | பட்டாசு விற்பனை செய்தல் | 1200 |
| 135 | பட்டாசு விற்பனை செய்தல் – விழாக்காலங்களில் மட்டும் | 700 |
| 136 | ஐஸ்கிரீம், பால், தயிர் விற்பனை செய்தல் | 700 |
| 137 | ஆடியோ அப்ளையன்சன்ஸ் | 700 |
| 138 | ஒன் யூஸ் பேப்பர் பிளேட் , பாக்குதட்டு, வாழை இலை விற்பனை செய்தல் | 700 |
| 139 | டிரைவிங் ஸ்கூல் | 1000 |
| 140 | பெட்டிக்கடை, இனிப்புகள், பீடா, வெற்றிலை பாக்கு, பொரி கடலை விற்பனை செய்தல் | 700 |
| 141 | வெல்டிங், வல்கனைசிங், சர்வீஸ் ஸ்டேசன் | 700 |
| 142 | அசோசியேட்ஸ் , அலுவலகங்கள் | 700 |
| 143 | மாற்று சாவிகள்/ பேக் ரிப்பேர் /விற்பனை செய்தல் | 700 |
| 144 | திறப்/ திறனை உதிரிபாகங்கள் விற்பனை செய்தல் | 700 |
| 145 | சமையல் எரிவாயு சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 146 | மினரல் வாட்டர் விற்பனை செய்தல் | 700 |

**அட்டவணை III**

**[See rules 289 (1), (2) and (7)]**

**(1) பொருந்தும்தன்மை :–இந்தஅட்டவணை, –**

(1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகங்கள்.

(2) 1939–ம்ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும்

(3) திருமண மண்டபங்கள், விருந்துமண்டபங்கள், அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக்சகூட்டங்களாகப் பயன்படுத்தப்படுகிற அனைத்து பொதுக்கூட்டங்களுக்கும் பொருந்தும்.

2) **உரிமகட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

(i) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக்கூடங்களுடன் கூடிய உணவுக்கூடங்கள், சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகங்கள்.

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/– அதிகப்பட்சகட்டணம் – ரூ.15000/–
(ஒருவருடத்திற்கான கட்டணம்):

| **தொழில் விபரம்** | **01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும்கட்டணம் ரூபாயில்** |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக்கூடங்கள், சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகங்கள். | சிற்றுண்டிச்சாலைக்கு 1000/–<br>உணவகம் ,<br>உணவுக்கூடங்களுக்கு – 1200/– |

**(ii) 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள்.**

**விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்த பட்சம்ரூ.1500/– அதிகப்பட்சகட்டணம் – ரூ.3500/–**
**(ஒருவருடத்திற்கானகட்டணம்):**

| **தொழில் விபரம்** | **01.04.2024 முதல் நிர்ணயம்செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** |
|---|---|
| (1) | (2) |
| 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | 1500/– |

**(iii) 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதாரசட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும்இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டுஅடுக்குமாடிகுடியிருப்புகள்**

**விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்த பட்சம் ரூ.3000/– அதிகப்பட்சகட்டணம் – ரூ.30000/–**

**(ஒருவருடத்திற்கானகட்டணம்):**

| **தொழில்விபரம்** | **01.04.2024 முதல் நிர்ணயம்செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** |
|---|---|
| (1) | (2) |
| 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார | 3000/– |

| | |
|---|---|
| சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் | |

**(iv) திருமணமண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக்கட்டடங்கள்**

**விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம்**
**குறைந்தபட்சம் ரூ.3000/– அதிகப்பட்சகட்டணம் – ரூ.30000/–**

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்) :**

| தொழில்விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம்செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| திருமண மண்டபங்கள் விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக்கட்டடங்கள் | 3000/– |

**அட்டவணை III**

**[See rules 282 (11) and 286(2) ]**

i) **தனியார் வாகன நிறுத்த நிலையம் மற்றும் உறைவிடம்(Shelter)**
**(ஒருவருடத்திற்கானகட்டணம்):**

| தொழில்விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம்செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| தனியார் வாகன நிறுத்த நிலையம் மற்றும் உறைவிடம் (Shelter) | 2000/– |

ii) **தனியார் இறைச்சிக் கொட்டில்கள்**
**(ஒருவருடத்திற்கானகட்டணம்):**

| தொழில்விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம்செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| தனியார் இறைச்சிக் கொட்டில்கள் | 2000/– |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்பு திருப்பூர் மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்து உரிமக்கட்டணங்கள் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.20000/– ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்,டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட விவரப்படி உப விதிகள் உருவாக்கி தொழில் உரிமம் கட்டணம் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற மன்றம் அனுமதிக்கலாம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்பு மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :05

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 09 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் தவிர பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, வார்டு எண்:01 முதல் 09 வரை உள்ள ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றை சரிசெய்ய ரூ.5.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2454/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :06

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2024–2025ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 07.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சிக்குட்பட்ட தெரு நாய்கள் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய மாதப்பூர் (MCC) மையத்தில் அறுவை சிகிச்சைகூடம் அமைத்தல் பணி | 9.00 | திருமதி.வி.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவு |
| | | | M/s. அன்னை எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள திருமதி.வி.கோமதி (மதிப்பீட்டினை விட 0.17% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:2300/2024/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :07

பல்லடம் நகராட்சி வார்டு எண்:10 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் தவிர பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, வார்டு எண்:10 முதல் 18 வரை உள்ள ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றை சரிசெய்ய ரூ.5.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2454/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 08**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேருந்து நிலையம், இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம், பேருந்து நிலைய கடைகள் 6/11, 4/4, 1/6, 7/11, ஆண்டாள் நகர் MCC மையம் மற்றும் பெரியார் நகர், JKJ காலனி, மேற்கு பல்லடம் ஏடி காலனி, மகிழம் அவென்யூ ஆகிய இடங்களில் புதியதாக மின் இணைப்புகள் பெறுவதற்கு C-Licensed ஒப்பந்ததாரர் கட்டணம் ரூ.15,214/- னை அரசு அங்கீகாரம் பெற்ற C-Licensed திரு.பி.சிவக்குமரன், பல்லடம் அவர்களுக்கு பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :09**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 03 நாரணாபுரத்தில் புதியதாக அமைக்கப்பட்ட நகர்ப்புற துணை சுகாதார நிலையம் மற்றும் நலவாழ்வு மையத்திற்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணற்றிலிருந்து குழாய் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்த ரூ.0.80 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2453/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :10**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 04 ஒன்பதாம் பள்ளம் மற்றும் விநாயகர் கோவில் அருகிலுள்ள ஆழ்துளை கிணற்றில் இரும்பு குழாய் துருப்பிடித்தும், கேபிள் பழுதடைந்தும் உள்ளதால் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட இரண்டு ஆழ்துளை கிணற்றிலுள்ள இரும்பு குழாய்களுக்கு பதிலாக புதியதாக யுபிவிசி குழாய்கள் மற்றும் கேபிள் மாற்றவும் ரூ.3.40 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்: 2452/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :11**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:05 டி.எம்.டி. நகர் பகுதிகளுக்கு குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான தண்ணீர் மங்கலம் சாலை அம்மாபாளையம் பிரிவு ஆழ்துளை கிணற்றிலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் மேற்கண்ட ஆழ்துளை கிணற்றில் தண்ணீரின் அளவு குறைந்து விட்டதால் டி.எம்.டி. நகர் பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, டி.எம்.டி. நகரில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி டி.எம்.டி. நகர் பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய ரூ.2.30 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2451/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :12**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 07 அபிராமி நகர் முதல் வீதியில் வீடுகள் அதிகமாக உள்ளதால் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, அபிராமி நகர் முதல் வீதியை இரண்டாக பிரித்து குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டி உள்ளது. மேற்காணும் பணிகளை செய்ய ரூ.0.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்: 2450/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :13</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 07 மீனாட்சி அவென்யூ பகுதிகளுக்கு இராயர்பாளையம் விநாயகர் கோவில் மண்டபம் அருகிலுள்ள திறந்த வெளி கிணற்றின் மூலம் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. திறந்தவெளி கிணற்றிலிருந்து மீனாட்சி அவென்யூ தூரம் அதிகமாகவும், அபிராமி நகர் மூன்று வீதிகளுக்கு தண்ணீர் செல்வதாலும், அழுத்தம் குறைவதால் குறைந்த அளவே மீனாட்சி அவென்யூ பகுதிக்கு தண்ணீர் செல்கிறது. எனவே, மேற்கண்ட பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டர் பொருத்த ரூ.4.70 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2449/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :14</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 08 பச்சாபாளையம் ஏடி காலனி அருகிலுள்ள கழிப்பிடத்தின் மேற்கூரை பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே, மேற்கூரையை அகற்றி விட்டு ஜி.ஐ ஷீட் பொருத்தவும், கழிப்பிடத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யவும் ரூ.2.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2448/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :15</u>**

பல்லடம் நகராட்சி அலுவலக நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர், கிரில் அமைக்கும் பணிகள் செய்தல் மற்றும் கழிப்பிடங்களுக்கு செல்லும் குழாய்களை மாற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.3.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2447/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :16</u>**

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள காணொளி அரங்கில் (VC Hall) False Ceiling, Cubboard. Door, PVC wall paneling , Lighting Arrangement மற்றும் இருக்கை வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.5.80 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2445/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :17</u>**

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அறையில் நாற்காலி, மேஜை, Visitor's Chair, முன்பக்க கதவு, Wall paper, Painting. Golden Tiatunam letter போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.2.70 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2446/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :18</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 13 அருள்ஜோதி நகர் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகாலில் தரைத்தளம் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் செல்ல முடியாமல் தேங்கி நிற்கிறது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, அருள்ஜோதி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அடித்தளம் பழுது பார்க்க ரூ.5.30 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2465/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :19**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட க.ச.எண் 513/1 மேற்கு பல்லடம் அண்ணா நகர் மேய்ச்சல் குட்டை வகைப்பாட்டில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டிட உத்தேசம் உள்ளதால் பொதுமக்களின் பயன்பாடு கருதி இவ்விடத்தை நகராட்சியின் பெயரில் பெயர் மாற்றம் செய்து தர மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டதில் மன்ற ஒப்புதல் கோரப்பட்டுள்ளது எனவே பெயர் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :20**

பல்லடம் நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு மற்றும் பொதுப்பிரிவிற்கு 4 எண்ணிக்கை கணினிகள் மற்றும் 5 எண்ணிக்கை பிரிண்டர்கள் வாங்குதல் பணிகள் மேற்கொள்ள ரூ.4.35 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2468/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :21**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து மேற்கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளதால் பொதுமக்கள் செல்ல பாதுகாப்பற்ற நிலை உள்ளது. மேற்கண்ட கழிப்பிடத்தி மீண்டும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளது. மேலும், பேருந்து நிலையத்தின் மேற்குபுறத்தில் வாரச்சந்தை அருகில் தூய்மை பாரத இந்தியா (SBM–U) 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டு வருகிறது. வாரச்சந்தைக்கு வரும் பொதுமக்கள் புதியதாக கட்டப்பட்டு வரும் கழிப்பிடத்தை பயன்படுத்திக் கொள்ள வசதியாக இருக்கும். எனவே, பொதுமக்களின் நலன் கருதி வாரச்சந்தையில் உள்ள மிகவும் பழுதடைந்த கட்டண கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2466/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :22**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 12 அண்ணாநகர் பகுதி கோவை – திருச்சி மெயின் சாலையிலிருந்து 01 முதல் 04 வரை உள்ள குறுக்கு தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால் பழுதுபட்டுள்ளது. இதனால் மழை காலங்களில் மழைநீர் செல்வது சிரமமாகிறது. எனவே இதனை பழுது பார்க்க வேண்டி உள்ளது மற்றும் புதியதாக ஒரு சிறுபாலம் அமைக்க வேண்டியது அவசியமாகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.2.30 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2464/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :23**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:17 கணபதி நகர் பூங்கோதை சைசிங் பின்புறம் உள்ள தெருவில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் மழைநீர் சாலையில் தேங்கியும் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் உட்புகுந்தும் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அத்தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது மற்றும் சிமெண்ட் சாலையில் உள்ள பள்ளங்களை சரிசெய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.4.60 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார்

செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2463/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :24**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மாணிக்காபுரம் மெயின் சாலை, திருச்சி – கோவை சாலை சந்திப்பிலிருந்து ஜே.கே.ஜே. காலனி முதல் வீதி வரை உள்ள குடிநீர் பகிர்மான குழாயானது மிகவும் பழுதுபட்டுள்ளது. இது சாலையின் நடு பாகத்தில் செல்கின்றது. இச்சாலையானது மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையாகும். குடிநீர் குழாயில் அடிக்கடி பழுது ஏற்படும் சமயங்களில் சாலையை வெட்டி பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, புதியதாக பகிர்மான குழாய் சாலையின் ஓரத்தில் அமைக்க வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள ரூ.9.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2462/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :25**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:15 நியூ எக்ஸ்டன்சன் தெரு அங்கன்வாடி அருகில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதுபட்டு பயன்பாடின்றி உள்ளது. எனவே இதனை இடித்து அப்புறப்படுத்தி சுற்றுசுவர் கட்டி இடத்தினை பாதுகாப்பு செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.5.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2461/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :26**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 17 வடுகபாளையம் ஹாஸ்டல் காலனி ரோடு, பொள்ளாச்சி ரோடு முதல் ஹாஸ்டல் ரோடு வரை உள்ள பழைய குடிநீர் பகிர்மான குழாயானது பதிக்கப்பட்டு சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. இதனால் இது அடிக்கடி பழுது ஏற்படுகிறது. தண்ணீர் அழுத்தம் மிகவும் குறைவாக உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் வழங்க இயலவில்லை. எனவே புதியதாக பகிர்மான குழாய் பதிக்க ரூ.7.60 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2460/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :27**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 12 அண்ணாநகர் பள்ளிவாசல் முதல் மற்றும் இரண்டாவது தெருக்களில் உள்ள மழைநீர் வடிகாலானது மிகவும் பழுதுபட்டுள்ளது மற்றும் பழைய சிமெண்ட் சாலையானது பள்ளமாக உள்ளது. இதனால் மழைநீர் வடிகாலில் செல்வதும் சாலையில் மழைநீர் தேங்கியும் அப்பகுதி பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்துகிறது. எனவே மழைநீர் வடிகாலினை பழுது பார்க்கவும் சாலையின் மட்டத்தை உயர்த்தவும் வேண்டியுள்ளது மற்றும் இச்சாலையில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் இரும்பு தண்ணீர் குழாய் சாலையின் மேல் மட்டத்தில் உள்ளதால் பாதசாரிகளுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே இதனை சாலையின் உட்புறம் பதிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.12.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்: 2459/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :28**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:12 அண்ணாநகர் நகராட்சி துவக்க பள்ளியில் உள்ள சுற்றுச்சுவரின் உயரம் மிகவும் குறைவாக உள்ளது. இதனை உயர்த்த வேண்டியும் சிறுநீர் கழிப்பிடத்திற்கு மேற்கூரை அமைக்க வேண்டியுள்ளது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2458/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :29**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 பெரியார் நகர், D.S.P குடியிருப்பு பின்புற சாலை மற்றும் மாணிக்காபுரம் ரோடு மேற்கு பெரியார் நகர் வீதி ஆகிய சிமெண்ட் சாலைகள் மிகவும் பழுதுபட்டு பாதசாரிகளுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் கடந்து செல்ல மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே இச்சாலையை மேம்பாடு செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட இரண்டு சாலைகளை பேவர் பிளாக் சாலையாக அமைக்க ரூ.25.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்: 2457/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :30**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:10 பாரதிபுரம் அங்கன்வாடியில் தரைத்தளம் மண் பகுதியாக உள்ளதால் மழைகாலங்களில் சேறும் சகதியுமாகிவிடுவதால் குழந்தைகளுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே பேவர் பிளாக் பதிக்க ரூ.1.70 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2456/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :31**

பல்லடம் நகராட்சி கீழ்க்கண்ட வார்டு பகுதிகளில் ஆழ்துளை கிணற்று மோட்டார்கள் பழுது பார்க்க வேண்டியுள்ளது.

1. வார்டு எண்: 14 மாருதி நகர் சர்ச் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்று 5 HP நீர்மூழ்கி மின்மோட்டார், கேபிள் மற்றும் ஜி.ஐ. பைப்கள் பழுது ஏற்பட்டுள்ளது.
2. வார்டு எண் :12 அண்ணாநகர் தீயணைப்பு நிலையம் பின்புறம் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள கேபிள் மற்றும் ஜி.ஐ. பைப்கள் பழுது ஏற்பட்டுள்ளது.
3. வார்டு எண் :12 அண்ணாநகர் குட்டையில் தேங்கும் தண்ணீரை வெளியேற்ற கூடுதலாக 7.50 HP மின்மோட்டார் பொருத்தி வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட ஆழ்துளை கிணற்று கேபிள், ஜி.ஐ. பைப்கள் மற்றும் மின்மோட்டார் பொருத்தும் பணிகளை ரூ.4.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2469/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :32**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர், சிடிசி காலனி, பனப்பாளையம் ஆகிய குடிநீர் நீர்த்தேக்க மேல்நிலைத் தொட்டிகளில் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணிக்கு ரூ.2.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்: 2468/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 33**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 18 சித்தம்பலம் சாலையில் உள்ள மழைநீர் வடிகாலின் பக்கசுவர்கள் முற்றிலும் பழுதுபட்டு இடிந்து மழைநீர் வடிகாலில் விழுந்துள்ளதால் மழைநீர் செல்ல இயலாத நிலையில் உள்ளது. இதனால் புதியதாக மழைநீர் வடிகால் கட்ட ரூ.9.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2460/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 34**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:18 பொள்ளாச்சி சாலை மயானம் அருகில் பொதுக்கழிப்பிடம் இல்லாத காரணத்தால் அப்பகுதி பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, பொள்ளாச்சி சாலை மயானம் அருகில் பொதுக்கழிப்பிடம் கட்ட ரூ.8.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2460/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 35**

பல்லடம் நகராட்சியில் 4–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. எஸ்.ஏ.பி நகர் சிறுவர் பூங்காவில் பராமரிப்பு பணிகள் செய்து தர கோருதல்.
2. ஆர்.வி. நகர், எஸ்.ஏ.பி நகர் அருண் பழனிச்சாமி வீடு, அந்தேரி கவுண்டர் தோட்டம், குமரன் வீதி ஆகிய பகுதிகளில் புதியதாக தெரு விளக்குகள் அமைத்து, அதற்கு உண்டான மின்கம்பிகள் அமைத்து தரக் கோருதல்

அந்தேரி கவுண்டர் விதியில் பூங்கொடி வீடு முதல் குருநாதன் வீடு வரை குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான குழாய் அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 36**

பல்லடம் நகராட்சியில் 6–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திருப்பூர் மயானப் பகுதியில் மின்விளக்கு வசதி செய்து தர கோருதல்.
2. ராயர்பாளையம் கழிவறைக்கு புதியதாக கதவுகள் அமைத்து தரக் கோருதல்
3. சக்தி நகர் சாலையின் இருபுறமும் பழுதடைந்துள்ள குழாய்க்கு பதிலாக புதியதாக குழாய் அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 37**

பல்லடம் நகராட்சியில் 8–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பச்சாபாளையம் மயானம் செல்லும் பாதையை சீரமைத்து மின்விளக்கு வசதி செய்து தர கோருதல்.
2. பச்சாபாளையம் காலனி அருகே உள்ள பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை புதுப்பித்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 38**

பல்லடம் நகராட்சியில் 10–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பாரதிபுரத்தில் பழுதடைந்துள்ள சாலையை புதுப்பித்து தர கோருதல்.
2. பாரதிபுரம் சாலையில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான தண்ணீர் குழாய் சாலையின் மேல் பகுதியில் உள்ளதால் அதை மாற்றி அமைத்து தரக் கோருதல்
3. பாரதிபுரம் சாக்குகாரர் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான தண்ணீர் குழாயை சரி செய்து தரக் கோருதல்

4. பாரதிபுரம் மற்றும் ஜே.கே.ஜே காலனி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய புதிய பிவிசி குழாய் அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 39**

பல்லடம் நகராட்சியில் 11–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பெரியார் நகர் மூன்றாவது வீதி முதல் குறுக்கு சந்திலிருந்து மாணிக்காபுரம் மெயின் சாலை வரை மழைநீர் வடிகால் அமைத்து தர கோருதல்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 40**

பல்லடம் நகராட்சியில் 14–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நியூ எக்ஸ்டன்சன் மூன்று வீதிகளில் தார் சாலையை சீரமைத்து தர கோருதல்.
2. நியூ எக்ஸ்டன்சன் வீதி கண்ணையன் மேஸ்திரி வீட்டு முன்பு பழுதடைந்த மழைநீர் வடிகாலை புதுப்பித்து தரக் கோருதல்
3. ஏடி காலனி பகுதியில் மூன்று இடங்களில் கான்கிரீட் தளம் அமைத்து தர கோருதல்
4. கொசவம்பாளையம் கே.வி.கே நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 41**

பல்லடம் நகராட்சியில் 17–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. காளியப்பா நகர், கணபதி நகர் பகுதிகளில் தார் சாலை பேட்ஜ் வொர்க் செய்து தர கோருதல்.
2. ஏடி காலனியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைத்து தரக் கோருதல்
3. கதர்கடை அருகில் உள்ள மயானத்தில் சுற்றுச்சுவர், கதவு சரி செய்து மேற்கூரை அமைத்து இதர பணிகள் செய்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**

**பொருள் : 42**

## பின்சேர்க்கைமன்றபொருள்

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் அருகில் நகராட்சி ர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 29404/2022/SS2 நாள்.20.03.2023–ல் மூலதன மானிய நிதி (CGF)2022–23–ன் கீழ் ரூ.59.00 லட்சம் மதிப்பீட்டில் பல்லடம் பேருந்துநிலையம் அருகில் கட்டப்பட்டு வந்த வாகனம் நிறுத்துமிடத்தில் இரு சக்கர வாகனங்களுக்கு கட்டண வசூல் செய்யும் உரிமத்திற்கு ஆண்டு குத்தகை விடுவதற்கு பொறியற் பிரிவு மூலமாக பொதுப் பணி துறை விலை விகிதப் பட்டியல் 2022–2023–ன் படியும் மற்றும் அரசு நில வழிகாட்டி மதிப்பின்படியும் தயாரிக்கப்பட்ட மாதாந்திர வாடகை மதிப்பீடு (RENTAL CALCULATION) பட்டியல் படி வருடாந்திர குத்தகை தொகையாக அரசுமதிப்பீடு ரூ.22,75,000/– நிர்ணயம் செய்யப்பட்டு முன்ஏலம் /ஒப்பந்தப்புள்ளி (PRE AUCTION/TENDER) மூலம் 08.02.2024, 29.02.2024, 07.03.2024 23.07.2024 மற்றும் 29.09.2024 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. மேற்கண்ட தேதிகளில் கலந்து கொண்டவர்கள் அரசு மதிப்பு அதிகமாக உள்ளது என தெரிவித்து ரூ.11,63,000/–க்கு மட்டுமே ஏலம் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொறியற் பிரிவு மூலம் கட்டுமான பணி முடிவடைந்துள்ளது என கடிதம் ந.க.எண்.1110/2022/இ1,நாள்.18.09.2024–மூலம் பணி முடிவுச்சான்று 03.10.2024–ல் பெறப்பட்டுள்ளது. எனவே பணி முடிவுச் சான்றின்படி மேற்படி ஆண்டுக் குத்தகை இனத்திற்கு வருவாய் நிதி இழப்பு ஏற்படாமல் இருக்கவும் அரசு மதிப்பீட்டின்படி உச்சஏலக் கேள்வி தொகைக்கு ஏலம் போகும் வரையில் தொடர்ந்து மறுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும், உச்சஏலத் தொகை கோரும் குத்தகைதாரருக்கு குத்தகையினை ஒப்படைக்கும் நாள் வரையில் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு வரப்படும் இரு சக்கர வாகனம் ஒன்றுக்கு ரூ.12/– வீதம் (24 மணி நேரத்திற்கு 12.01AM முதல் அடுத்த நாள் இரவு 12.00PM முடிய) வசூலிக்க நிர்ணயம் செய்து துறை வசூல் பணி மேற்கொள்ளவும், அதற்கான இரசீது அச்சடித்திட ஆகும் செலவினங்களை மேற்கொள்ளவும், தொடர்ந்து மறுபொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.00406/2024/அ2]

<u>அலுவலககுறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**